# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கி வரும் பத்திரிகை

25.10.1991


### தோல்வியைச் சமாளிக்க வார்த்தை ஜாலம்

யாழ்நகரை நோக்கி முன்னேற முயன்று படுதோல்வியை அடைந்துள்ள இலங்கை இராணுவத்தலைமைப்பீடம் "யாழ் நகரைக் கைப்பற்றுவதா இல்லையா என்பது பிரச்சினையல்ல விடுதலைப்புலிகளை இராணுவரீதியாகப் பலமிழக்கச் செய்வதே எமது இராணுவ நடவடிக்கையின் நோக்கம்" எனக்கூறி சமாளிக்க முயல்கிறது. இவ்வாறே முன்பு வவுனியாவிலிருந்து இராணுவம் முன்னேற முயற்சித்து படுதோல்வி கண்டபோதும் "விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத" கதையை இராணுவத்தலைமைப்பீடம் பேசியது நினைவு கூறத்தக்கது.

# யாழ் நகரைக் கைப்பற்றும் நடவடிக்கை முறியடிப்பு!

## தாக்குதல் தீவிரமடைந்து வருகிறது

யாழ் நகரைக் கைப்பற்றும் நோக்குடன் 19ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை தீவிரமடைந்து வருகின்றது. இவ் இராணுவ நடவடிக்கை பல முனைகளிலும் நடத்தப்பட்டு வருகின்றது. ஊர்காவற்துறைப் பகுதியில் முகாம் அமைத்திருந்த இராணுவத்தினர் மண்டைதீவுக்கு வருவதற்கு முயற்சி எடுத்து வருகின்றனர். அதேவேளை பண்ணைக் கால்வாயை படகுகளின்மூலம் கடந்து அராலித்துறையில் படையினரை இறக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அராலித்துறையில் இறக்கப்படும் படையினர் பொம்மைவெளி என்னும் இடத்தினூடாக யாழ் நகரை வந்தடைய முடியும் என்றும் திட்டமிட்டுள்ளனர்.

### இரு முனைத் தாக்குதல்

ஊர்காவற்துறையிலுள்ள இராணுவத்தினர் மண்டைதீவிற்கு வந்து அதன் பின் யாழ் நகரை நோக்கி பண்ணைப் பாலத்தினூடாக முன்னேறும் அதேவேளை, அராலிப் படகுத்துறையில் தரையிறக்கப்படும் ணுவத்தினர் பொம்மைவெளியினூடாக நகர்ந்து ஒரே சமயத்தில் யாழ் நகரை இரு புறங்களில் தாக்க முடியும் என்பதே இராணுவத்தின் திட்டமாக உள்ளது.

### பரந்த வெளியில் தாக்க முயற்சி

முக்கிய தாக்குதல் நடைபெறும் இப் பகுதிகள் பெரும் பரந்த வெளிப்பிரதேசங்கள் ஆகும். பரந்த வெளியில் நின்று போரிடும் விடுதலைப்புலிகளை குண்டுவீச்சு விமானங்களின் மூலமும் கெலிகாப்டர்கள் மூலமாகவும் இலகுவாகத் தாக்கி அழிக்கமுடியும் என்ற நோக்கத்துடனும் அதேசமயத்தில் விமானங்களின் பாதுகாப்பில் இராணுவத்தினர் முன்னேற முடியும் என்பதாலும் இம்முறை இவ்விரு பெரும் பிரதேசங்களின் ஊடாக இராணுவத்தினர் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

### புலிகளின் கவனத்தை திருப்ப முயற்சி

அதேவேளை விடுதலைப்புலிகளின் கவனத்தை திசை திருப்புவதற்காகவும் அல்லது புலிகளின் தாக்குதலை ஒரே இடத்தில் செறிவடையாமல் தடுப்பதற்காகவும் யாழ் மாவட்டத்திலுள்ள பல பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

முதலில் வடமராட்சியில் மக்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேறுமாறு பணித்து பருத்தித்துறையில் குண்டு வீச்சு ஆரம்பிக்கப்பட்டது. பருத்தித்துறை கடற்பகுதிகளிலும் இராணுவத்தால் தரையிறங்க முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் பருத்தித்துறைப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் கடுமையாக இருந்துவருகின்றது.

### முன்னேற்ற முயற்சி தடுக்கப்பட்டது

அதேவேளை பலாலி இராணுவ முகாமிலிருந்தும், பலாலி வீதி வழியாக இராணுவத்தினர் யாழ்நகரை நோக்கியும் காங்கேசன்துறைப் பகுதியால் மாவிட்டபுரத்திலிருந்து தெல்லிப்பளை நோக்கியும் இராணுவத்தினர் முன்னேற முயற்சி எடுத்தனர். அவ்வப்பகுதிகளை ஏற்கனவே சுற்றி வளைத்து காவலரண்களை அமைத்திருந்த விடுதலைப்புலிகள் முன்னேற முயன்ற இராணுவத்தினரை தடுத்து வருகின்றனர்.

மேலும் ஆனையிறவு, காரைநகர் கடற்படை முகாம் ஆகிய பகுதிகளில் இருந்தும் படையினர் வெளியேற முயன்றபோது விடுதலைப்புலிகள் இவர்களைத் தடுத்து நிறுத்தி மோதி வருகின்றனர். ஆனாலும் இப்பகுதிகளில் நடைபெறும் மோதலானது புலிகளின் செறிவை பிரதான தளமாகிய தீவுப்பகுதிகளில் இருந்து குறைப்பதற்காகவே நடத்தப்படுவதாக புலிகள் தெரிவிக்கின்றனர்.

### அராலித்துறையில் பெரும் மோதல்

தீவுப்பகுதி இராணுவ நடவடிக்கையில் தற்போது 4000த்திற்கும் அதிகமான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. அராலித்துறைப்பகுதியிலேயே மிகவும் அதிகமான மோதல்கள் இடம்பெற்று வருகின்றது. வேலணைப்பகுதிகளிலிருந்து அராலித்து

தொடர்ச்சி 7ம் பக்கம்

## தாக்குதலை நிறுத்த நிபந்தனை

### மாகாணசபையை ஏற்குமாறு நிர்ப்பந்தம்

அண்மைக்காலங்களில் இலங்கையில் நடைபெறும் இனப்பிரச்சனையை தீர்த்து வைப்பதற்காக பல சர்வதேச நிறுவனங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தன. மிகச் சமீபத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு.பிரபாகரன், பேச்சுவாரத்தைக்கு தாம் தயாராக இருப்பதாக அறிவித்ததுடன், சமாதான முயற்சி குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்திருந்தது.

### சமாதான முயற்சிக்குத் தடை

ஆனால் தற்போது சிறிலங்கா இராணுவத்தினர் யாழ் பகுதியைக் கைப்பற்றும் நோக்குடன் ஆரம்பித்திருக்கும் தாக்குதல் முயற்சி இதுவரை காலமும் வளர்த்து வந்த சமாதான முயற்சிக்கான சூழ்நிலையை தகர்ப்பதாய் அமைந்துள்ளதாக சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரமுகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதேவேளை சமாதானத்தை விரும்பும் மக்களும், பல நிறுவனங்களும் தற்போது யாழ் பகுதிகளில் நடைபெறும் தாக்குதலை நிறுத்துமாறும் இத்தாக்குதல் களினால் ஏராளமான பொதுமக்கள் பாதிப்படைந்திருக்கின்றனர் என்பதையும் அரசிடம் தெரிவித்துள்ளனர்.

### நிபந்தனை முன்வைப்பு

புலிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு பேச்சுவார்த்தைக்கு வந்து மாகாணசபையை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது இலங்கையின் ஒற்றையாட்சிக்குள் ஒரு தீர்வைப் பற்றிப் பேச முன்வரவேண்டும் என அரச தரப்பில் இருந்து அதிகாரபூர்வமற்ற முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக நடைபெற்றுவந்த சமாதான முயற்சிகள் இத்தாக்குதல்களின் காரணமாக தடைப்பட்டுள்ளதால் பல சமாதான விரும்பிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். தற்போதைய கொழும்புச் சூழ்நிலையைப் பொறுத்தவரை இன வாதிகளினதும் இராணுவத்தினரதும் கை யோங்கியிருப்பதாகத் தெரியவரு கிறது.

**பிந்திய செய்தி**

### இராணுவம் பின்வாங்கியது

தமிழீழவிடுதலைப்புலிகளின் எதிர்ப்பைத் தாங்கமுடியாது பின்வாங்கி ஓடிய இலங்கை இராணுவம் வலம்புரி நடவடிக்கையின் 2ம் கட்டம் முடிந்துவிட்டது. 3ம் கட்டம் எப்போது எனக் கூறமுடியாது என கதை அளக்கத் தொடங்கியுள்ளது.

## தீவுப்பகுதியிலிருந்து வெளியேறிய பொது மக்களின் படகு மூழ்கடிப்பு

யாழ் தீவுப்பகுதிகளில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளினால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தீவுப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து யாழ் பகுதிகளை நோக்கி வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போதும் கெலிக்காப்டர்கள் வான்வெளியில் பறந்துகொண்டிருந்தாலும் இரவு வேளைகளிலேயே மக்கள் படகுகள் மூலம் தீவுப்பகுதிகளில் இருந்து யாழ் பகுதியை வந்தடைகின்றனர்.

பாசையூர், கொழும்புத்துறை, அரியாலைப்பகுதிகளில் இடம்பெயர்ந்து வரும் மக்களை உடனடியாக வரவேற்று தகுந்த வசதியளித்து தற்காலிக அகதி முகாம்களுக்கு அனுப்பும் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தொண்டர்கள் செய்து வருகின்றனர்.

புனர்வாழ்வுக்கழகத்தினருடன் தொண்டர் படையினரும் இணைந்து இரவு பகலாக சேவை செய்து வருகின்றனர்.

இப்படியாக இரவு வேளைகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படகுகளில் பொதுமக்கள் வந்துகொண்டிருந்தபோது திடீரென்று தோன்றிய கெலிக்காப்டர் ஒன்று வானத்தில் வெளிச்சக் குண்டுகளை வீசியது. அவ்வெளிச்சத்தால் பொதுமக்களின் படகுகளை நோக்கி அக் கெலிக்காப்டர் தாக்குதலை நடாத்தியது. இத்தாக்குதலில் இரு பொதுமக்களின் படகுகள் மூழ்கடிக்கப்பட்டது. அப்படகில் பயணம் செய்தவர்களில் இருவர் மட்டுமே உயிர்தப்பி கரை சேர்ந்ததாகவும் அறியப்படுகிறது.

மேலும் இரு படகுகள் சிறு சேதத்திற்கு உள்ளாகியதுடன் அப்படகில் காயமடைந்த பொதுமக்களையும் கொண்டு கரை சேர்ந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மூழ்கிய படகுகளில் மொத்தம் 15 பேர் இருந்திருக்கலாமென நம்பப்படுகின்றது.

# இனவாதம்

தமிழீழப் பகுதிகளின் மீது மீண்டும் மிகப்பெரிய இராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் சமாதானம், பேச்சுவார்த்தை, சமரசம் என்று வாய் கிழியக் கத்திக் கொண்டிருந்த சிங்களத் தலைமைகள் மீண்டும் போர் முனைப்பில் இறங்கியிருக்கின்றன.

அண்மையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சர்வதேசப் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது வெளிப்படையாக நாம் பேச்சு வார்த்தைக்கு தயாராக இருப்பதாகவும். சிறிலங்கா அரசு இராணுவத் தீர்வுகளைக் கைவிட்டு சமரச முயற்சிக்கு வரவேண்டுமென்று அறிவித்திருந்தார்.

கொழும்பில் தலைமைப் பதவிக்காக சண்டையிட்டுக் கொண்டிருக்கும் வேளையில் கூட தமிழ்மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

பிரேமதாசாவுக்கு எதிரான அதிருப்தியாளர்கள் குழு தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை கக்கியே சிங்கள மக்களிடையே தமது செல்வாக்கை தேட முயல்கின்றனர்.

அதேவேளை பிரேமதாசா தமிழ்மக்கள் மீது பெரிய இராணுவ நடவடிக்கைகளை நடத்துவதன் மூலம் காமினி, லலித் போன்றவர்களை விட தான் சிறந்த சிங்களப் பௌத்தன் என்று காட்டி சிங்கள மக்களிடையே தனது பதவியை நிலைநிறுத்த முயல்கின்றார்.

இப்படியிருந்த போதிலும் கடந்த நாற்பது வருடங்களாக தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை முன்வைத்தே சிங்களத் தலைமைகள் தமது செல்வாக்கை நிலைநிறுத்த முயன்று வந்திருக்கின்றனர் என்பதை தமிழ்மக்கள் யாரும் மறந்துவிட முடியாது.

தினம் தினம் துன்பத்தையும், துயரத்தையும் சந்தித்துக் கொண்டிருக்கும் தமிழர்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எவரும் முன்வரவில்லை. மாறாகத் தொண்டமான் எடுத்த சமரச முயற்சிக்கு ஏராளமான முட்டுக்கட்டைகள் தோன்றியுள்ளது. தொண்டமான் சமாதான முயற்சியை மேற்கொண்ட உடனேயே அகில இலங்கை பௌத்த அமைப்பு அதற்கு கண்டனம் தெரிவித்ததுடன் தொண்டமானை பதவி விலகுமாறும் கூறியது.
ஆக மொத்த சிங்களத்தில் இனவாதிகளால் வளர்க்கப்பட்ட சிங்கள இனவாத பூதம் இன்று விஸ்வரூபம் எடுத்து அரசியல் வாதிகள் கூட கட்டுப்படுத்த முடியாதபடி வளர்ந்து விட்டது.

அனைத்து சிங்கள இயக்கத் தலைமைகளும் இன்று இவ் இனவாதத்தை எதிர்த்து செயல்பட முடியாமல் மீண்டும் மீண்டும் அதன் போக்கிலேயே சென்று கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமானால் சிங்கள இயக்கத் தலைமைகளிடம் புதிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும். நவீன உலகில் ஏற்படும் புதிய மாற்றங்களை புரியக் கூடிய பக்குவம் உருவாக வேண்டும்.

ஆனால் தமது சுயநலம் கருதி உலகின் நடைமுறைகளை புரியமறுக்கும் மலிவான அரசியல்வாதிகளால் எப்போதும் ஓர் இனத்தின் சுதந்திர வேட்கையை புரிந்து கொள்ள முடியாது. 40 வருடங்களுக்கும் மேலாக தமிழ் மக்களின் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுக்காமல் தொடர்ந்தும் சிங்கள, பௌத்த இனவாதத்தையே வளர்த்து வரும் சிங்கள அரசியல்வாதிகளிடம் எப்படி தமிழ் மக்கள் சமாதானத்தையும் அமைதியையும் எதிர்பார்க்க முடியும்.

தமிழர்கள் அனைவரும் ஓரணியின் கீழ் நின்று தமது சுதந்திரப் போராட்டத்தை முனைப்பாக முன்னெடுத்தலே இதற்குச் சரியான தீர்வாகும்.



## விடுதலைப்புலிகள் நவீன வடிவங்களிலான தீர்வில் ஆர்வம்

### யாழ் வளாகத்தில்

### தலைவர் பிரபாகரன்

"தமிழீழ விடுதலைப்புலிகள் நவீன வடிவங்களில் தீர்வுகளை ஏற்படுத்த ஆர்வமாகவே உள்ளனர். தேசிய இனங்களின் விடுதலை தொடர்பாக உலகில் நடைபெறும் முற்போக்கான மாற்றங்களை சிங்கள அரசு தான் உணரவில்லை."

என தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் யாழ்பல்கலைக்கழக மாணவருடன் கலந்துரையாடுகையில் கருத்துத் தெரிவித்தார். அண்மையில் யாழ் பல்கலைக்கழத்தில் மாணவர்களிடை நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சர்வதேச அரசியல் மாற்றங்களைச் சுட்டிக் காட்டிய அவர் தேசிய இன விடுதலைப் போராட்டம் நடைபெற்ற நாடுகளில் சர்வதேச ரீதியில் பல நவீன அரசியல் வடிவங்கள் மூலம் தீர்வுகள் முன்வைக்கப்பட்டதைக் குறிப்பிட்டு அவ்வாறான வகையில் தீர்வுகளை நவீன வடிவங்கள் ஊடாக ஏற்படுத்த விடுதலைப்புலிகள் ஆர்வமாகவே உள்ளனர். ஆனால் சிங்கள அரசு தான் தேசிய இனங்களின் விடுதலை தொடர்பாக உலகில் நடைபெறும் முற்போக்கான மாற்றங்களை உணரவில்லை எனக் கூறினார்.

திலீபனின் நினைவாகப் புலமைப் பரிசு.

யாழ் பல்கலைக் கழகம் திலீபனின் நாலாவது ஆண்டு நினைவையொட்டி மாதம் ஒன்றுக்கு 2500/ ரூபாவுக்கான புலமைப் பரிசு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. உயிரியல் தொழில் நுட்பத்துறையில் ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கு ஒரு ஆண்டுக்கு இப் புலமைப் பரிசு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழீழ மக்கள்

# இரண்டு யுத்தங்களை ஒரே நேரத்தில் சந்தித்துள்ளனர்

### • தலைவர் வே.பிரபாகரன் •

"தற்பொழுது ஈழத்தமிழர்கள் இரண்டு யுத்தங்களை ஒரே நேரத்தில் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள் முதலாவது எமது தாயகத்தை எதிரியிடமிருந்து மீட்பதற்கான விடுதலைப் போராட்டம், இரண்டாவது போதிய உணவை உற்பத்தி செய்து பொருளாதாரத்தடை என்ற பெயரில் சிங்கள அரசால் உணவுப் பொருட்களை வடகிழக்குக்கு அனுப்புவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடையை முறியடிப்பது. இந்த இரு போராட்டத்திலும் நாம் வெற்றி பெற்று எமது இலட்சியமான தமிழீழத்தை அடைவோம் என்பதில் உறுதியுடன் இருக்கின்றோம்."

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் "அர்ச்சயா" பழக் கைத்தொழில் நிறுவனத்தின் முதலாவது ஆண்டு பூர்த்தி விழாவிற்கு அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது : எமது தாயக வரலாற்றை எடுத்து நோக்கின் அந்நியர்கள் காலனித்துவ ஆட்சியைத் தொடங்கி எமது சுயபொருளாதாரத்தை அழிக்கும் வரை எமது தாயகம் கலப்பு பொருளாதார அமைப்பில் தன்னிறைவைப் பெற்றிருந்தது. அந்நிய உணவு வகைகளும் அந்நியர் உணவுகளை உண்ணும் பழக்கமும் எமது மக்கள் மேல் திணிக்கப்பட்டது.
ஏகாதிபத்திய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தேயிலை, இரப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்களை அறிமுகம் செய்து உணவு வகைகளை உற்பத்தி செய்த நிலங்களை கைவிட்டனர் அவர்கள் நிர்வாக வசதிக்காக வடகிழக்கையும் இலங்கையின் மற்றைய பகுதிகளையும் ஒருங்கிணைத்தனர். அவர்களே கொழும்பை உணவுச் சந்தைப்படுத்தலின் பிரதான மையமாக மாற்றினர். இதன் விளைவாக தன்னிறைவுடன் இருந்த தமிழ்ப்பகுதிகள் தமது தன்னிறைவுத்தன்மையை இழந்து கொழும்புச் சந்தையில் தங்கி வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். பிரிட்டிஸ்சாரைப் பின்தொடர்ந்த சிங்கள அரசாங்கங்கள் தமிழர்கள் கொழும்பில் தங்கி வாழும் தன்மையை ஊக்கப்படுத்தி வளர்ந்தனர்.
தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் தமது வருமானத்தை கொழும்பில் உள்ள வர்த்தகத்திலும், தொழில்முயற்சிகளிலும் இருந்து பெறுவதினால், தமிழர்களுடைய விடுதலைக்கான போராட்டம் வெற்றி பெற முடியாது என சிங்கள இனவெறி அரசியல் வாதிகள் கருதிவந்தனர். இதன் காரணமாகவே விடுதலைப் போராட்டம் வெற்றி பெறும் நிலையை அடையும் ஒவ்வொரு முறையும் சிறிலங்காவின் அரசாங்கம் பொருளாதாரத்தடையை எமது பகுதிகள் மேல் மேற்கொண்டு வருகிறது.
சிறிலங்கா அரசின் பொருளாதாரப் பயமுறுத்தல் எமது விடுதலைப் போராட்டத்திற்கான ஒரு சவால். நாம் இந்தச் சாவாலை ஏற்று எமது பொருளாதாரத்தை உணவு உற்பத்தியில் சீரான முறையில் வளர்ச்சி பெற்று தன்நிறைவு அடைந்து அவர்களில் தங்கி வாழுவோம் என்னும் அவர்களின் எதிர்பார்ப்பை முறியடிப்போம். எம்முடைய விடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலையில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல் நாம் தமிழீழத்தை அடைவதற்கான மிக அத்தியாவசிய முன் தேவையாக உள்ளது.

## போராளிகளுடன் இணையும் மக்கள் வெள்ளம்

சிங்கள அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினாலும் தொடர்ச்சியான குண்டுவீச்சு மோட்டார் தாக்குதலினாலும் உயிர்களை இழந்தும் வதியிடங்களை இழந்தும் அனாதரவாக நிற்கும் தமிழீழ மக்கள் தங்களது உயிருக்கும் பாதுகாப்புக்கும் பக்கத் துணையாகத்திகழும் தமிழீழவிடுதலைப்புலிகளுடன் சேர்ந்து தமது மனோதைரியத்தாலும் ஒத்துழைப்பாலும் சிங்கள ஆக்கிரமிப்பாளரைத் துணிச்சலுடன் எதிர்த்து நிற்கின்றனர். களத்தில் காயமடையும் போராளிகளை பராமரிக்கும் பொறுப்பை யாழ் பல்கலைக் கழக மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் தாமாகவே முன்வந்து ஏற்றுக் கொள்கின்றனர். யாழ்நகரில் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் பாலம் அலுவலகத்தில் தினமும் ஏராளமான மாணவர்கள் அணிஅணியாக திரண்டு வந்து தமது பெயர்களைப் பதிவுசெய்கின்றனர். விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட தொண்டர் படையில் மாணவர்கள் மட்டுமின்றி தாய்தந்தையர்கள் சகோதரிகள் வயது முதிர்ந்தோர் என தமிழீழமக்களில் கணிசமான தொகையினர் இணைந்து வருகின்றனர்.

### இலக்கியக்களம்

எமது தமிழீழப் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் முகமாக களத்தில் இலக்கியக்களம் ஒன்றிற்கு இடம் ஒதுக்கியுள்ளோம். உங்கள் ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.

# சர்வதேசக் களம்

- சாரதாதேவி -

## நோபல் பரிசும் பர்மிய அரசியலும்

ஜெனரல் நீவின் தலைமையிலான இராணுவ சதிப்புரட்சி 1962ல் இடம் பெற்ற காலம் முதல் பர்மாவில் பயங்கர கொடூர ஆட்சியும் மனிதஉரிமை மீறல்களும் பர்மிய மக்களை சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்தி வந்தது. கடந்த வருடம் நவம்பரில் இது ஒழிக்கப்பட வேண்டும், பர்மாவின் மீது பொருளாதாரத்தடை கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கை சுவீடனால் ஐ.-நா.வில் கொண்டு வரப்பட்டது. இதனை ஒரு வருடத்துக்கு ஒத்திப் போடும்படி ஜப்பான் கோரியதை அடுத்து வரும் நவம்பர் வரை உலகம் அங்கு மாற்றங்களை எதிர்பார்த்து ஏமாந்ததைத்தான் கண்டுள்ளது.

யார் இந்த நோபல் பரிசு பெற்ற எதிர்க்கட்சிகளின் தலைவி ? பர்மாவின் சுதந்திரப் போராட்ட வீரர். அயூன்ங்சன் என்பவரின் புதல்வியான அயூன்ங்கன் சுகியீ என்பவரே இவர். இவர் பர்மிய அரசியலில் தலையிட்டமை தற்செயலானது. 1960ல் தனது 15ஆவது வயதில் இங்கிலாந்து சென்று ஆக்ஸ் போர்ட்டில் கற்று வெளிநாடுகளில் தங்கி விட்ட இவர் 1988ல் நோயுற்ற தனது வயோதிபத் தாயை பார்வையிட பர்மா வந்தார். இராணுவ அரசை நாடு சீர் திருந்த எதிரணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி கோரியதுடன் பேசாது இருந்து விட்டார். அமைதியான சுபாவமுடைய இவர் மகாத்மா காந்தி வழியில் அசைக்க முடியாத மதிப்பை வைத்திருப்பவர். 1989 செப்டம்பரில் எதிர்க்கட்சியினரின் அமைதி ஊர்வலத்தை வயோதிபர், குழந்தைகள் என்று பராது சுட்டு கொன்று அடக்கியதும் இவர் தீவிரமாக அமைதி பிரச்சாரத்தில் இறங்கி நாடு பூராகவும் ஆதரவு பெற்ற தலைவியானார். குறுகிய காலத்தில் இவர் செல்வாக்குப் பெற்றதைக் கண்ட அரசு இவரை 1989 யூலை தடுப்புக்காவலில் வைத்து இது வரை விடுதலை செய்யவில்லை. இவர் ஆற்றிய சமாதானப் பணிக்கு இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு சிறையில் இருக்கும் பொழுதே வழங்கியமை சர்வதேச அரங்கில் இவர் செல்வாக்கை உயர்த்தியுள்ளது. இம்மாதம் நவம்பரில் பர்மிய பிரச்சனை ஐ.-நா.வில் எடுபடும் வேளை இதனை எதிர்க்கும் நாடு எது வாயினும் இவர் சம்பாதித்த உலக புகழ், நோபல் பரிசு என்பனவற்றால் மிகவும் தர்ம சங்கடத்தினை எதிர்நோக்கும் என்பதில் ஐயமில்லை.

## கம்போடிய அகதிகளின் தாயகம் திரும்பல் பிரச்சினை

330000 கம்போடிய அகதிகள் போல்பட் அரசின் லட்சக்கணக்கானோர் படுகொலையில் இருந்து தப்பிவந்து ஐ.-நா.கண்காணிப்பில் அயல் நாடான கம்போடியாவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை மீளக் குடியமர்த்தும் பணி சம்பந்தமானதுட்பட்ட சமாதானக் கையொப்பம் விரைவில் பாரிஸில் கைச்சாத்திடப்படப் போகிறது. உள் நாட்டில் அமைதியான தேர்தல் நடத்தப்பட்டு நிலைமை சீர்திருந்தியதுமே இவர்கள் திருப்பியனுப்பப்படுவர் என்பதுமே ஏற்பாடு. ஆனால் தற்பொழுத நள்ளிரவு வேளைகளில் பழைய பொல்பட் கும்பல்கள், சிகானுக் இளவரசர் ஆதரவாளர் போன்றோர் தங்கள் பிரதேசங்களுக்கு வாருங்கள் என்று அழைப்பு விடுத்த வண்ணமுள்ளனர். இத்தகைய நிலையில் அங்கு திரும்பி இவர்கள் செல்வாரேயானால் முன்பு தப்பிய தலைகள் இம்முறை தப்புமா ? என்ற கேள்வி எழுகிறது.

## புதிய உலகப் பொருளாதார ஒழுங்கு

New Economic worLd order என இன்று இது பரவலாகப் பிரசித்தி பெற்று வருகிறது. 1990ன் பின்பு வரும் ஆண்டுகளில் இதுவரை உலகில் இருந்து வரும் அரசியல் , பொருளாதாரப் போக்குகள் புதிய வடிவத்தை நோக்கி திசை திரும்புகிறது. இது வரை காலமும் இருந்த நிலைமாறி அமெரிக்காவுடன் புதிய ஐரோப்பிய கூட்டு நாடுகளும் பொருளாதார உலகில் முதன்மை வகிக்கும் நிலையை அடையப் போகின்றன. கம்யூனிஸ நாடுகள் ஐரோப்பிய வறிய நாடுகளாகக் கணிக்கப்படுகின்றன. இதில் ஐரோப்பிய வட பாக நாடுகள் கைத்தொழிலில் முன்னேறிய செல்வந்த நாடுகள் ஸ்தானத்தைப் பெறுகின்றன. ஆசியாவில் ஐப்பான், செல்வாக்கு மிக்க அந்தஸ்தைப் பெறுவதுடன் ஆசிய வறிய நாடுகளான இந்தியா, இலங்கை, பங்களா தேஸ்,பாக்கிஸ்தான், பர்மா போன்றவற்றிற்கு நன்கொடை வழங்கும் ஸ்தானத்தை ஏனைய ஆசியான் நாடுகளும், அவுஸ்ரேலியா நியூசிலாந்து, சீனா போன்றவை இரண்டாவது இடத்தையும் ஆசியாவில் பெறுகின்றன. ஏனைய லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்க ஆசிய நாடுகள் கடைஇடத்தையும், இதற்கு மேல் பட்ட இடத்தை எண்ணை உற்பத்தி செய்யும் அரபு நாடுகள் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. எது எவ்வாறு இருப்பினும் எதிர்காலத்தில் இடம் பெறப்போகும் அரசியல் நிகழ்ச்சிகளே இதனை முடிவு செய்யப் போகிறது.

# இலங்கை அரசும் இராணுவமும் எதிர்மாறான நிலையில்

## இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை கருத்து

''இராணுவநடவடிக்கைகளை தொடருவதால் மக்களுக்கு தொடர்ச்சியாக ஏற்படக்கூடிய அவலங்களையும் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படக்கூடிய பாதிப்பையும் கருத்தில் கொண்டு அரசியல் தீர்வு முயற்சியில் நாட்டு தலைமைத்துவம் நாட்டம் காட்ட முற்படுவதையும் இராணுவம் இதற்கு எதிர் மாறான நிலையில் செயற்படுவதையும் குறைத்து மதிப்பிட முயலக்கூடாது.''

என இலங்கையின் தமிழ்ப் பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது வடமராட்சியை தாக்கும் ''ஒபரேசன் வலம்புரி'' என்ற பெயரிலான இராணுவநடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது பற்றி அப்பத்திரிகை ஆய்வுக்கட்டுரை ஒன்று வெளியிட்டுள்ளது. ''-இராணுவநடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கான தயாரிப்பு வேலைகளை செய்வதற்கான கால அவகாசத்தை பெறுவதற்கான ஒரு தந்திரோபாய கருவியாகவே இன்று சமாதான முயற்சிகள் மாறி இருக்கின்றன இது துரதிருஸ்ட வசமானதே'' எனக் கூறும் அப்பத்திரிகை 1987ல் வடமராட்சியைத் தாக்கத்தொடங்கிய இராணுவம் ஒரு முழுச் சுற்றை வலம் வந்து முடித்து இருக்கிறது. என்று கேலி செய்கிறது தமிழீழத்தை எல்லாக் கோணங்களிலும் இருந்து தாக்கிக் களைப்புற்று மீளவும் திரும்ப வடமராட்சியைத் தாக்கும் செயற்பாட்டையே இராணுவப் பிரயத்தனங்கள் என எள்ளி நகையாடுகிறது 1987 மே யில் வடமராட்சிமேல் மேற்கொள்ளப்பட்ட ''ஒபரேசன் லிபரேசன்'' என்ற பெயரிலான தாக்குதல்தான் இந்தியாவின் தலையீட்டை ஏற்படுத்தியது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

''கிட்டத்தட்ட ஒன்றரை வருடகாலமாக பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நாடொன்றின் நிலையில் வாழும் இலட்சக்கணக்கான மக்கள் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் குவிவதினால் ஏற்படக்கூடிய அவலங்களை எண்ணிப் பார்க்க எவருமே இல்லாத நிலை'' எனக் கவலை தெரிவித்துள்ளது .

# யாழ் நூலகத்தை எரித்தவர்கள் ஐ.தே.கட்சியினரே

## பிரேமதாசா பகிரங்கப்படுத்தினார்

யாழ்ப்பாணத்தில், அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த அருட் திரு.லோங் அவர்களால் தொடங்கப் பெற்று ஆசியாவில்லுள்ள பிரபல்யமான நூல்நிலையங்களுள் ஒன்றாக விளங்கிய யாழ் பொதுசன நூலகத்தை ஐக்கிய தேசியக்கட்சியினரே எரித்தனர் என்பதை இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா பகிரங்கப்படுத்தியுள்ளார். அத்துலத்முதலிக்கும், பிரேமதாசாவுக்குமிடையே அரசியல் மோதல் தொடங்கியதன் விளைவாக இருவருமே ஐக்கிய தேசியக்கட்சியினால் நாட்டுக்குச் செய்யப்பட்டுள்ள அநீதிகளை போட்டி மனப்பான்மையினால் வெளியிட்டு வருகின்றனர்.

'' மாவட்ட சபைத் தேர்தலின்போது எமது கட்சியைச் சேர்ந்த சிலர் மற்றய இடங்களில் இருந்து ஆட்களை வடக்கிற்கு எடுத்துச் சென்று காடைத்தனம் செய்து தேர்தலைக் குழப்பினர். அவர்களே இன்று சதி முயற்சிகள் செய்து வருகின்றனர்.

பெறுமதியான நூல்களைக் கொண்டிருந்த யாழ் நூலகத்தை எரித்தவர்கள் யார் என்பதை காண வேண்டுமென்றால் எமக்கு எதிராக சதி செய்பவரின் முகத்தைப் பார்த்தால் தெரியும்'' என ஜனாதிபதி பிரேமதாசா புத்தளம் கரிராகல்லூரியில் தேசிய மீலாத் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். ''இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றமேதுமில்லை'' எனக் கூறி தனது இரட்டை வேடத்தை நிரூபித்துக் கொண்டார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை

## பிரான்சிய அரசு சார்பற்ற நிறுவனம் நிராகரித் தது

பிரான்சிய அரசு சார்பற்ற நிறுவனமான எம்.எஸ்.எவ் (மருத்துவப் பணிக்குழுவின் வாகனம் மீது வவுனியாவில் வைத்து இலங்கை விமானப் படையின் விமானம் மேற் கொண்ட தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்ய வென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தீர்வை ''வெறும் கண்துடைப்பு - நீதியற்றது - ஏற்றுக் கொள்ளமுடியாதது - பக்கசார்பானது'' எனக் கூறி எம்.எஸ்.எவ் வின் ஒருங்கிணைப்பாளர் நிராகரித்துள்ளார்.

இவ் விமானத் தாக்குதலில் எம்.எஸ்.எவ் வின் வாகனமும் சேதமடைந்ததுடன் அதில் பயணம் செய்த நால்வர் படுகாயமடைந்தனர் என்பது நினைவு கூரத்தக்கது. இந்த தனி நபர் ஜனாதிபதி ஆணைக்குழுவின் நீதிபதியாகக் கடமையாற்றிய இளைப்பாறிய உயர் நீதிபதி டி அல்விஸ் தமது தீர்ப்பில் விமானப்படையின் செயற்பாட்டை 'நல் நோக்கத்திற்காகச் செய்யப்பட்ட தவறு என வர்ணித்ததாக அறியப்படுகிறது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட எம்.எஸ்.எவ் வின் ஒருங்கிணைப்பாளர், நீதிபதியின் விசாரணை அரசாங்கத்தின் வெறும் கண்துடைப்பு முயற்சி எனவும் எம்.எஸ்.எவ் இது தொடர்பாக தனது பலத்த ஏமாற்றத்தை அரசுக்கு தெரிவிப்பதாகவும் கூறினார். மேலும் தாம் இது தொடர்பாக அரச ஆயுதப்படைகள் மேல் நம்பிக்கை வைக்க முடியாது எனவும் கூறினார். இச்சம்பவம் தொடர்பாக எம்.எஸ்.-எவ் வின் அமைப்பினூடாகப் பணியாற்றிய நாற்பது டாக்டர்கள் நாட்டைவிட்டு திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

கலை கலாச்சார நிகழ்ச்சிகளுடன் கூடிய
தமிழீழ விடுதலைப்புலிகளின்
பிரித்தானியக் கிளையினால்
ஒழுங்கு செய்யப்பட்ட

**மாவீரர் நாள்**

- காலம் - 04.01.1992 சனிக்கிழமை
- இடம் - வோல்தம் போரஸ்ட் அசம்பிளி கோல் (வோல்தம் போரஸ்ட் கவுன்சிலுக்கு அருகில் )
- நேரம் - மாலை 6.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.




"இவவைத் தெரியுமே, இவதான் சுகி: கிறேசின்ர மனிசி" சுகியை இவ்வாறு அந்தப் பெண் போராளி அறிமுகப்படுத்தியதும் சுகியை நிமிர்ந்து பார்த்தேன். சிரிப்பை மறந்துபோன அந்த முகம் அதை வரவழைக்க முயன்று தோற்றுப்போய் நின்றது. ஆனால் அதில் உறுதி என்பது மட்டும் குலையாது நிற்பதை அவதானிக்க முடிந்தது.

கிறேசியின் 90ஆம் நாள் நினைவஞ்சலிக்காக தான் எழுதிக்கொண்டுவந்த விசயத்தை சுகி என்னிடம் தந்து 'நாளைக்கு இத ஈழநாதத்தில் போடவேணும்' என்று சொன்னதும் அதைப்படிக்கத் தொடங்கினேன். 'அன்பு வாழ்க்கையில் ஒரு வருடம் கூடக்காத்திருக்க விடவில்லையே இத்துட்டர்கள்' என்ற அந்த ஒரு வரிக்குள் மனதில் உள்ளவை அப்படியே கொள்ளப்பட்டிருந்தன. செய்வோம் அல்லது இப்புனிதமான மண்ணில் செத்து மடிவோம் என்ற உங்கள் வார்த்தை மறையவில்லை. மறைக்கப்பவுமில்லை என்ற வரிகளுக்குள் ஒரு வருடத்திற்கும் குறைவான அந்த வாழ்க்கைக்காலத்தினுள் அந்தத்தம்பதிகள் எப்படியான வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றனர் என்பதை உணர முடிந்தது. 'கிறேசியின்ர குண இயல்புகளைப்பற்றி சொல்லுங்கோவன்' என்று கேட்டதும் சிறிதுநேர மௌனத்துக்குப்பின் சுகி சொல்லத் தொடங்கினார்.

'90ஆம் ஆண்டு அஞ்சாம் மாசம் இருபத்தைஞ்சாம் திகதி எங்கட கலியாணம் நடந்தது. கலியாணம் முடிஞ்சவுடன் ஒருமாசம் எங்களுக்கு லீவு கிடைச்சது' அதுக்கிடையில சண்டை துடங்கியிட்டுது. அவர் மண்டைதீவுக்கு குறுாப் கொண்டுபோயிட்டார். நான்ட்றெயினிங் காம்புக்குப் போயிட்டன்'.

வாழ்வின் ஆரம்பத்திலேயே அந்த நிலையென்றால் இந்த மண்ணின் தேவை எப்படியிருக்கின்றது என்பதை விளக்க வேறு வார்த்தைகள் தேவையில்லை. இந்தளவுக்கு உடனே இயல்பாக போர்க்களத்துக்குள் பயிற்சி முகாமுக்கும் போகமுடிகின்றதென்றால் அதுதான் பிரபாகரனின் வளர்ப்புமுறை. புடம்போட்டு எடுக்கப்படும் போராளிகளை உலகின் எந்த சக்திகள் அசைத்துவிடமுடியும்.

அப்ப எல்லாம் நாங்கள் சந்திச்சது குறைவு. பத்து நாளைக்கொருக்காவோ இரண்டு கிழமைக்கொருக்காவோதான் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைச்சது. அவர் மண்டைதீவில நடந்த சண்டயில காயப்பட்டார். காயத்தால அவர் துடிச்சதை விட அந்தச்சண்டையில இவளவு போராளிகளை இழந்திட்டமே எண்ட வேதனை தான் அவருக்கு அதிகமாக இருந்தது. உளரீதியாக பாதிக்கப்ட்டிருந்தார். காயமும் கொஞ்சம் கொஞ்சமா மாறிச்சுது.

இவர் தன்னை சண்டைக்கு. விடச்சொல்லி மாத்தயாண்ணயிட்ட நச்சரிச்சுக்கொண்டிருந்தார். கடைசிச்சண்டைக்குப்கோக அனுமதி கிடைச்சது. அப்ப திருகோணமலைக்கும் போறதாத் தான் இருந்தார். அப்ப ஒரு கசெற்றில தான் கதைச்சதை எனக்கு அனுப்பியிருந்தார். 'நான் திரும்பிவரவில்லையெண்டா நீங்கள் இயக்த்தில இருந்து கடைசி வரைக்கும் போராடித்தான் சாவீங்கள் எண்டு நம்புறன். எங்கட இயக்கத்துக்கு விசுவாசமா: தலைவரில-மாத்தயாண்ணயில- இயக்கத்தில இருந்தே சாக வேணும்' எண்டெல்லாம் அந்தக்கெசெற்றில" கதைச்சிருந்தார்.

தொடற்சியாக சுகி சொல்லிக் கொண்டிருக்கும் போது 'இப்படியும் ஒரு தம்பதிகளா என்று வியந்து கொண்டிருந்தேன். ஒவ்வரு கணவனும்,- மனைவியும் தமது எதிர் காலத்தைப்பற்றி எப்படியெல்லாம் திட்டமிடுவர்?, எமக்கு ஒரு வீடு, சேமிப்பு, பிற்காலத்தில எப்படியிருக்கலாம்?, எந்த நாட்டுக்கு போனா கூட உழைக்கலாம்?, என்ன வேலை செய்தாக்கூட உழைக்கலாம்? என்றெல்லாம் திட்டமிடும் போது இதே சமுதாயத்துக்குள் இருந்து 'நான் திரும்ப வரவில்லையெண்டா...' என்று இயக்கத்தின் நலனைப்பற்றி சிந்திக்கும் எமக்கு ஒரு நாடு வேண்டும் என்று ஆசைப்படும் இவர்கள் வித்தியாசமானவர்கள் தான்.

சுகி சொல்லிக்கொண்டிருந்தார். 'அடிக்கடி அவர் சொல்லிக்கொண்டிருப்பார்.'கலியாணம் முடிச்சிட்டமெண்டு நாங்கள் சண்டையில பின்னிற்கக்கூடாது; சாகவேணுமெண்டா சாகவேணுந்தான். நீங்கள் அடிக்கடி அண்ணாக்களைக்கண்டு அவை சொல்லுவதைக்கேக்கவேணும். இந்த சமுதாயத்துக்கு நாங்கள் முன்மாதிரியா வாழ்ந்து காட்டவேணும். எங்களுக்கு ஒரு குழந்தை இருந்தாலும் நாங்கள் செத்தா இயக்கம் அந்த குழந்தையை வளர்க்கும் பிள்ளை பிறந்தாக்கூட சண்டை வரும் போது சண்டை பிடிக்கவேணும். அடிக்கடி அவர் சொல்லுறது 'செய்வோம் அல்லது செத்து மடிவோம்' எண்ட வசனத்தைத்தான். சொல்லிலும் செயலிலும் இயக்கத்தின் நலனையே சிந்திக்கும் கிறேசியின் குடும்ப வாழ்க்கை பற்றி கேட்டபோது 'எந்த விசயத்தையும் நீங்கள் முடிவெடுத்து செய்தாச்சரிதான் எண்டு எல்லாத்தையும் என்னுடைய முடிவிலேயே விட்டுவிடுவார்' என்று பதிலளித்தார் சுகி. அதுசரி 'நீங்கள் ' எண்டுதானே கிறேசி கதைப்பான்? - அப்படியெல்லாம் வீட்டில் கதைத்துப்பழக்கமில்லாத எனது கேள்வி. 'நீ எண்டோ அடியேஎண்டோ ஒரு வார்த்தையில்ல ' என்றார் சுகி. கிறேசியின்ர தகப்பனாரை ஏன் சுட்டவங்கள் ஈ பி ஆர் எல் எவ் ? என்று கேட்டதற்கு இவரில உள்ள ஆத்திரத்திலதான் தகப்பனாரைச்சுட்டவங்கள். வேறு ஒரு காரணமுமில்லை. செத்தவீட்டுக்கு இவர் வருவார் எண்டு கூட எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தாங்கள். என்றார். சண்டையைப்பற்றி சொல்லுங்கோவன் என்று கேட்டதற்கு இயக்கத்தில இருந்தவரைக்கும் தொடற்சியா சண்டை பிடிச்க்கொண்டுதான் இருந்தவர். அதுக்கு கணக்கு வழக்கில்ல. கிளிநொச்சியில நடந்த எல்லாச் சண்டையிலையும் பங்கு பற்றினவர் எண்டு நான் கேள்விப்பட்டனான். நாங்கள் கலியாணம் முடிக்க முதல் 87 ஆம் ஆண்டு நெல்லியடித் தாக்குதலில் பங்கு பற்றின நாங்கள். இவர் பிறகு கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளரா இருந்த்வர் என்று கூிறினார்.

கிறேசியின்ர கடைசி நாளைப்பற்றிச் சொல்லுங்கோவன் என்று கேட்டதற்கு பரப்புக்கடந்தானில் நடந்த சண்டையில தான் அவர் வீரமரணம் எய்தினவர். அப்ப நான் பயிற்சி முகாமில் இருந்தனான். அவர் சாகிறபோது நான் ரெண்டு மாசம்..... இது அவருக்கும் தெரியும்..... இப்ப எட்டு மாசம்.... சரளமாகக் கதைத்துக்கோண்டிருந்த வாய் மௌனித்தது. கைப்பையிலிருந்த கைக்குட்டையை சுகியின் கை தேடியது. நான் எழுந்து சென்றேன்

சரி போட்டுவாறன் - விடை பெற்றுக்கொண்டார் சுகி - கண்கள் சிவந்திருந்தன, அதில் கிறேசியின் குருதியைக்கண்டேன்.

## வாசகர் கடிதம்

மதிப்பிற்குரிய ஆசிரியர்க்கு,

உங்கள் பத்திரிகையில் வெளியாகும் செய்திகள் பற்றிய எமது அபிப்பிராயங்களை வெளியிடும்படியாக நீண்டகால கோரிக்கை விடுத்தும் இதுவரை செவி சாய்க்காது இருந்து வருகிறீர்கள். ஒரு பத்திரிகையின் வளர்ச்சி ஆசிரியர் குழுவின் திறமையுடன் வாசகர் கருத்துக்கள் பரிமாறப்படுகையில் தான் இடம் பெறுகிறது. எனவே இதற்கென ஒரு பகுதியை ஏற்படுத்துவீர்களா?

**இப்படிக்கு**

**ந.குகநேசன்**

**ரூற்றிங்**

அன்பான ஆசிரியர்க்கு,

உங்கள் பத்திரிகையைத் தொடர்ந்து படித்து வருபவர்களில் நானும் ஒருவன். உங்கள் பத்திரிகையில் படைக்கப்படும் படைப்புக்களின் தரம் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்தும், சில சமயம் அவற்றில் எழுத்து பிழைகள் அதிகமாக இடம் பெற்றும் வருகின்றன. இத்தனை அகதிகள் இங்கிலாந்தில் இருந்தும் இதைச் சரிவரச் செய்ய உதவிக்கு ஒருவரும் வருவதில்லையா. பொறுப்பான பத்திரிகை இது என்பதால் பின்வரும் ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன். பத்திரிகையில் கேள்வி-பதில், இலங்கை போன்ற இடங்களில் இருக்கும் தமிழர்கள் பற்றிய செய்திகள் வருவது வரவேற்கப்படத் தக்கது.

**இங்ஙனம்**

**மான்டஸ் ஆறுமுகம்**

**ஈஸ்ற்காம்**

## தளிர்கள் இரும்பைச் சுமக்கும்!

இதோ—
பாருங்கள்!
இரு பச்சிளம் பறவைகள்
வழிந்து போன
வாழ்க்கை நினைவுகளை
உதறிவிட்டு
நீருக்குள்
நீச்சலடிக்கத் துடிக்கின்றன!
கண்களில் கசியும்
கண்ணீரை
சேற்றுத் தண்ணீர்
கழுவுகிறதோ!
நீர் சுமந்து
தளதளக்கும்
நீண்ட குளங்களில்
தாமரைப் பூவை
பறிக்கவேண்டிய
கரங்கள் —
வெறும் காற்றை
வெப்பத்துடன் ஏந்துகின்றன!
அகதிகளாக்கியவன்
அரியாசனத்தில்
அமர்ந்திருக்க-
அல்லிகள்
நெருப்பையல்லவா
இருப்பிடமாக்கிக் கொண்டன!
இது—
சாஸ்வதமானதல்ல-
எங்கள்-
தளிர்களின்
நெஞ்சங்கள்
இரும்பைச் சுமக்க-
எழுந்து வரும்!
எங்கள் தமிழீழம்
இளம் பிஞ்சுகளின்
புன்சிரிப்பால்-
நிச்சயம் ஒளிர்விடும்!

● வவுனியா திலீபன்



# புனர் வாழ்வுப் பணியில் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் முன்னணி வகிக்கிறது

தமிழீழப் பகுதிகளில் சிங்கள அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதாரத் தடையால் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையை நீக்கும் முகமாக தமிழர் புனர் வாழ்வுக் கழகம் உடனடி உணவு உற்பத்திக்கான காலபோக விவசாயக் கடன் வழங்கு திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. 1991 ஆவணி வரை சுமார் ஆயிரம் பேர் காலபோக விவவசாயத்தைக் கடன் உதவி மூலம் ஆரம்பித்துள்ளனர். சிங்கள அரசால் தொழில் இல்லாதவர்களாக மாற்றப்பட்டுள்ள எமது மக்களுக்கு வாழ்வுக்கு வழியாகவும் வளநாட்டின் பொருளாதார வளத்தை மீளப்பெற்றுத் தன்னிறைவு அடைவதற்கான ஊக்க சக்தியாகவும் இத் திட்டம் இயங்குகிறது. சுமார் ஐம்பது இலட்சம் ரூபா எதிர்பார்ப்பு நிதியாக இத் திட்டத்திற்குத் தேவையாக உள்ளது. தமிழீழ மக்கள் தமது தாங்கொணாத் துயர வாழ்வுக்கு மத்தியிலும் தமது பங்களிப்பாக பத்து இலட்சம் ரூபாவைத் திரட்டி அளிக்க முன் வந்துள்ளனர். மக்கள் முன்னேற்ற உதவியாக பத்து இலட்சம் ரூபா வழங்கப்படுகிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பத்து இலட்சத்தை வழங்குகிறது. துண்டு விழும் இருபது இலட்சம் ரூபாவையும் தமிழீழத்திற்கு வெளியே வாழும் தமது உடன் பிறப்புக்கள் வழங்க வேண்டுமென தமிழீழ மக்கள் எதிர்ப்பார்க்கின்றனர்.

தமது உடன் பிறப்புக்களின் பட்டினி நிலையைப் போக்க புதிய இரத்தத்தை வழங்க வேண்டிய பொறுப்பை உணர்ந்த வெளிநாடுகளில் வாழும் தமிழீழக் குடி மக்களும் உற்சாகத்துடன் வெளிநாடுகளில் உள்ள தமிழர் புனர் வாழ்வுக் கழகங்களின் ஊடாக தமது பங்களிப்பைச் செலுத்தித் திட்டத்தை விரைவு படுத்த விருப்பம் தெரிவித்துள்ளனர்.

**சுயசார்பு தொழில் முயற்சி கூட்டமைப்பு**

தமிழீழ மக்களின் சுய தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்தும் நோக்காக திருப்பிச் செலுத்தும் கடன் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சுய சார்பு தொழில் முயற்சிக் கூட்டமைவுகள் அமைக்கப்பட்டு இவைகளின் ஊடாக கடன் வழங்கப்பட உள்ளது. யாழ் மாவட்டத்தில் ஏழு கூட்டமைப்புக்களும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா ஒவ்வொரு கூட்டமைவும் அமைக்கப்பட்டுள்ளது. விரிவுரையாளர்கள், நிதியீட்டாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 700 பேருக்கு இது வரை உதவி வழங்கப்பட்டுள்ளது.

**தென் தமிழீழத்தில் சத்துணவுத் திட்டம்.**

தென் தமிழீழத் தாய்மார்கள் போசாக்கின்மை காரணமாக நோய் வாய்ப்படும் நிலைக்கு உள்ளாவதாக சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து தென் தமிழீழத் தாய்மாருக்கான சத்துணவுத் திட்டம் ஒன்றை முல்லைத்தீவை மையமாகக் கொண்டு T. R. O அறிமுகப்படுத்தியுள்ளனர்.

**சிறுவர் பராமரிப்பு இல்லம்**

ஏற்கனவே 68 பிள்ளைகளை வைத்துப் பராமரித்து வந்த தமிழர் புனர் வாழ்வுக் கழகம் சமீபத்தில் கிளிநொச்சிக் குருகுலத்தைச் சேர்ந்த 65 பிள்ளைகளையும் பொறுப்பேற்று நடாத்தத் தொடங்கியுள்ளனர். அத்துடன் சிறுவர்களின் போசாக்கின்மையைப் போக்கும் முகமாக 15 பாலர் பாடசாலைகளுக்கு பால் வழங்கவும் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் பொறுப்பேற்றுள்ளது.

**இடம் பெயர்ந்தோருக்கு வாழ்விடம்**

தீவுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் இருபத்தியோராயிரம் பேரில் ஐம்பதினாயிரம் பேருக்கு மூன்று நாட்கள் தங்கிடமும், உணவும் தமிழர் புனர் வாவுக் கழகம் வழங்கியது. அத்துடன் இவர்களினால் ஆயிரம் பேருக்கு நிரந்தரமாக வாழக் கூடிய கொட்டில்கள் அமைத்துக் கொடுத்து இரண்டு வாரங்கள் பராமரித்ததுடன் 500 குடும்பத்தவர்களுக்கு தொடர்ந்தும் உதவியளித்து வருகின்றது.

**அநாதரவானோரைப் பராமரித்தல்.**

காணாமல் போனவர்களின் 300 குடும்பங்களுக்கு வாராந்த உணவுப் பொருட்களை வழங்கியும் அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் பராமரித்து வருகின்றது.

**வவுனியா - முல்லைத்தீவு பகுதிகளில் பணிகள்.**

வவுனியா மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த ஆயிரம் குடும்பங்களுக்கு இரண்டு வாரங்களுக்கு குடியிருப்பு வசதிகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்படுத்தி தமிழர் புனர் வாழ்வுக் கழகம் பராமரித்தது. ஓமந்தைப் பகுதியில் மீளக் குடியமரச் சென்ற 300 குடும்பங்களுக்கு குடிசைகள் அமைத்துக் கொடுத்ததுடன் சமையல் செய்வதற்கான பாத்திரங்களையும் வாங்கிக் கொடுத்து உதவிய தமிழர் புனர் வாழ்வுக் கழகம் இவர்களுக்கு நிவாரணப் பணிகளில் தொடர்ந்து உதவி வருகிறது.

முல்லைத் தீவு மாவட்டத்தில் 100 விவசாயிகளுக்கு கச்சான் செய்கைக்கான கடனுதவியாக தலா 2000 ரூபாவும் 100 விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கான கடனுதவியாக தலா 6500 ரூபாவும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

# புனர்வாழ்வுப் பணிக்கு கூட்டமைப்பு

யாழ் மாவட்டத்திலுள்ள அரசுசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கான தங்கள் பணிகளை ஒருங்கிணைக்கும் முகமாக அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பேரவை ஒன்றை நிறுவியுள்ளனர்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரான பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களைத் தலைவராகவும் ரெட்பார்ணாவைச்சேர்ந்த திரு.கே.-சத்திஜேயதா சர்மா அவர்களைச் செயலாளராகவும் வை.எம்.சி.ஏ யைச் சேர்ந்த திரு.எம். தம்பித்துரை அவர்களை பொருளாளராகவும் தமிழ் அகதிகள் பனர்வாழ்வுக் கழகத்தினரான திரு.-கே.பி.அரவிந்தனை இதழாசிரியராகவும், 100, இராசாவின் தோட்டவீதி யாழ்ப்பாணத்தை தலைமையகமாகவும் கொண்டு இவ் அரசுசார்பற்ற நிறுவனங்களின் கவுன்சில் இயங்கிவருகிறது இதில் அங்கம்பெறும் அரசுசார்பற்ற நிறுவனங்கள் வருமாறு

(1) ரெட்பார்னா (Red Barna)
(2) யூ.கே குழந்தைகள் காப்பு நிதியம்(Save the children Fund(U. K))
(3) சர்வோதயா (Sarvodaya)
(4) தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (TRO)
(5) போரட் (FORUT)
(6) மெதடிஸ் திருச்சபை (Methodist mission)
(7) செஞ்சிலுவைச் சங்கம் (Red Cros Society)
(8) அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (TRRO)
(9) தென்னிந்தியத் திருச்சபை C
(10) அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83 (RRF 83)
(11) கியூ டெக் (Hudec)
(12) அறவழிப் போராட்டக் குழு (NVDAG)

இவ் ஒருங்கிணைப்பானது, தமிழீழவிடுதலை புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஜனநாயகத்தன்மையுடன் தாம் மட்டுமல்லாது மற்றைய மக்கட்பணிக் குழுக்களையும் அரவணைத்துச் செல்வதை வெளிஉலகத்துக்குத் தெளிவாக காட்டியுள்ளது.

திரு.சிவசுப்பிரமணியம் (சர்வோதயா), ஜெயராஜசிங்கம் (யூ.கே,சிறுவர் பாதுகாப்பு நிதியம்), திரு.எஸ்.யோகநாதன் (தமிழர் புனர்வாழ்வுக் கழகம்), அருட் சகோதரி எம்.பி,டெரிசின் (கியூ டெக்-கத்தோலிக்கத் திருச்சபையின் அமைப்பு), திரு.கோவிந்தராஜன் (மெதடிஸ் சபை) ஆகியோரையும் தலைவர், செயலாளர், பொருளாளர், இதழாசிரியர் ஆகியோரையும் உள்ளடக்கிய செயற்திட்டக்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.



# வெளிநாட்டுத் தமிழருக்கு புனர் வாழ்வுக்கழகத்தினர் நன்றி

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடையினாலும், சிங்கள இனவாத அரசு வெளிநாட்டவர் இலங்கைத்தமிழர்களின் நிவாரணத்திற்கென வழங்கிய உதவிகளைக் கூட கொழும்பில் தடுத்து வதைத்மையினாலும் நாம் மிகக் கடினமான வாழ்க்கையை வாழவேண்டி நிர்ப்பந்திக்க்ப் பட்டநிலையில் வெளிநாட்டில் வாழும் நீங்கள் காட்டும் அன்பும் ஆதரவும் எமக்கு உற்சாகத்தையும் புதுத் தென்பையும் தருகின்றது. இதற்காகத் தமிழீழ மக்கள் சார்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினராகிய நாம் உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

# தமிழீழப் போர்களத்தில் எட்டப்பர்கள்

தமிழ் மக்கள் மீது இராணுவரீதியாக மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவென காரைநகருக்கு பதில் பாதுகாப்பு அமைச்சர் அமரதுங்கா ஏயார்மார்ஸல், வால்ரர் பெர்ணான்டோ ஆகியோர் விஜயம் செய்தபோது கூடவே தமிழ்த்துரோகக் குழுக்களில் ஒன்றான ஈ.பி.டி.பி யைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தாவும் சேர்ந்து வந்துள்ளார். இவர் தமிழீழத்தின் புவியியல் அமைப்புக்கள் சம்பந்தமான பாதைகள் தெருக்கள் இராணுவ ஆலோசனைக்கும் உளவு எட்டப்பர் வேலைக்கும் உதவிட வந்திருக்கலாம் என விசயம் றிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் வடக்கில் தாக்குதல்களை மேற்கொண்டிருக்கும் விமானப்படைக்கு உதவியாக துரோகக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் செயற்படுகிறார்கள் என்பதை பொதுமக்கள் FM வானொலி அலைகளில் தூயதமிழ்ச் சொற்களால் வானில் பிறப்பிக்கப்படும் கட்டளைகளை கேட்டதன் மூலம் உறுதி செய்துள்ளனர்.

தாண்டிக்குளம் ஊடாகப்பயணம் செய்யும் அப்பாவிப் பொதுமக்களை துரோகக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஆயுதமுனையில் துன்புறுத்தி வருவதாக தகவல்வந்துள்ளன. பொதுமக்கள் அன்றாட உணவுக்கும் வாழ்க்கைத் தேவைகளுக்குமென கொண்டு வரும் பொருட்களை சிலர்கள் பறித்துக் கொள்ளையிடுவதுடன் புலிகள் பற்றிய விபரங்களைக் கூறும்படியாக வற்புறுத்தியும் சித்திரவதை செய்தும் வருகின்றனர்.

கொழும்பில் இருந்து மட்டுமல்லாது இந்தியாவில் இருந்தும் உளவாளிகளைத் தமிழீழப்பகுதிக்குள் ஊடுருவச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு சான்றாக சாவகச்சேரியில் இரண்டு உளவாளிகள் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.




தமிழீழ மண்ணைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களின் கயமைக்கு எதிராக யாழ்நகரில் மாணவர் ஆர்ப்பார்ட்ட ஊர்வலம் செய்கையில் எடுத்தபடம்.

# குவைக்கபீஸின்சமாதான முயற்சி

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழலை நிர்வாக்கும் நோக்கத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்த குவைக்கர் பீஸ் அரச சார்பற்ற சர்வதேச நிறுவனத்தினர் வடக்குச் சென்று விடுதலைப்புலித் தலைவர்களுடன் கலந்துரையாடி கொழும்பு திரும்பி உள்ளனர். புலிகள் சமாதானத்தை விரும்புகின்றனர் என அவர்கள் கொழும்பில் கருத்துவெளியிட்டுள்ளனர்.

# சென்னை உயர் நீதிமன்றம் பொலிசாருக்கு எதிராகத்தீர்ப்பு

தமிழகத்தில் திலீபன் நற்பணி மன்றத்தால் நடத்தப்பட இருந்த மகாநாட்டிற்கு தமிழக பொலிஸ் கமிஸனரால் விதிக்கப்பட்ட தடை சட்டத்திற்கு எதிரானதென சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பேச்சுரிமை அரசியல் சட்டப்படி மக்களுக்கு உள்ள உரிமைகளில் முக்கியமானது. ஜனநாயக நாட்டில் தடுக்கவோ கட்டுப்படுத்தவோ கூடாது. கருத்தரங்கை தடைசெய்ய கமிஸனர் எடுத்த முடிவானது எதேச்சதிகாரமானது எனக் கண்டித்த நீதிபதி இந்தக் கருத்தரங்கினால் சட்டம் ஒழுங்குப்பிரச்சினை எற்படுமென பொலிசார் நினைத்தால் அதற்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்கவேண்டியது பொலிசாரின் கடைமையாகும் என நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

இந்தத்தீர்ப்பு தமிழக மக்களின் பேச்சுரிமையில் கைவைத்து தமிழக மக்கள் தமிழீழ மக்கள் பிரச்சினை பற்றிப் பேசுவதைக் கூட தடுக்க முயலும் ஜெயலலிதாவின் ஆட்சிக்கு கிடைத்துள்ள பலத்த அடிஎன அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

# மனலாற்றில் தோல்விகண்ட இராணுவம் மீண்டும் தாக்குதல்

மூன்று வாரங்களுக்கு முன்னர் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு முகம் கொடுக்க முடியாது முல்லைத்தீவில் இருந்து பின் வாங்கி ஓடிய இராணுவம், திரும்பவும் தனது தாக்குகலை ஆரம்பிக்க முயன்ற பொழுது அவர்களை ஒரு அங்குலம் கூட முன்னேற விடாது விடுதலைப்புலிகள் வீராவேசமாகப் போரிடத் தொடங்கினர். ஏராளமான இராணுவத்தினர் இறந்தும் படுகாயமடைந்தும் தோல்வியைத் தழுவிய இராணுவம் முன்னேறமுடியாது தடுமாறிக் கொண்டிருக்கிறது. 13 இராணுவத்தினர் இருந்தும் 58 பேர் படுகாயமடைந்திருப்பதாகவும் சிங்கள அரசு ஏற்றுக் கொண்டது.

மணலாற்றுப் பகுதியில் யுத்தத்தினால் வெளியேறிய சிங்கள குடியேற்ற வாசிகளை மீண்டும் மீளக்குடியமர்த்த இராணுவம் முயன்ற போதே யுத்தம் ஆரம்பமாகியது.

> ஒடுக்கு முறையாளர்களுக்கு முதலில் முகம் கொடுப்பது பெண்களே. எனவே அவர்களுக்குத்தான் புரட்சிக்கான நிர்ப்பந்தங்கள் உண்டு. இதை விட போராட்டங்களில் ஆண்களின் இழப்பும், உழைப்பாளர் தொகை குறைவதும் இயல்பாக போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கின்றது.
>
> *பிரதித்தலைவர், கோ. மகேந்திரராசா*



## கற்பதற்காய்...

பன்னிரண்டு வயதினிலே பால்வடியும் வதனத்தான்
பற்றெல்லாம் அறுத்துவிட்டான் - பைப்சியின கவிதைகளால்
கல்வியிலே தூனிவன் காவியங்கள் இவனறிவான்
பள்ளியிலே இலவசக்கல்வியிலே - திரிபுற்ற காவியங்கள்
வால் நுழையாவோணான்கள்

இலவசப்புத்தகத்தில் இலவசமாய் சேர்த்த கதை
எங்களின் கிராமத்தில் தினசரியும் கூட்டங்கள் தீராத
கண்டனங்கள்

ஐம்பத்தேழுமுதல் இதுவேதான் தொடரும் கதை
ஆனபயனொன்றுமில்லை அடியேனானறிந்தவரை

ஆனாலும் ஒளிக்கீற்று அடியேனுக்கிவன் தந்தான்
பார்புகழ வாழ்வதற்கு ஏடெடுக்கவேண்டியவன்
பார்மீது தமிழ்காக்க ஆயுதங்கள் ஏந்திவிட்டான் - புரிகிறதா?
கற்பதற்காய் போராடப் புறப்பட்டான் வீரமகன்.

— சு. கபூர்

## ஜேர்மனியில் இனவெறி
## தமிழிளைஞர் காலிழந்தார்

ஐரோப்பாவில் இனவெறி உணர்வுகள் வளர்ந்து வருவதை சமீபகாலமாக பிற இன மக்கள் மேல் நடைபெறும் தாக்குதல்கள் தெளிவு படுத்தி வருகின்றன.

சமீபத்தில் சார்புறூக்கன் பஸ் நிலையத்தில் நின்றிருந்த சங்கரன் ராதாகிருஸ்ணன் என்னும் இளம் தமிழ் அகதியை மொட்டையர்கள் மூவர் பலவந்தமாக காரில் ஏற்றி பலாத்காரமாக போதை ஊசியை ஏற்றி மயக்கிய பின்பு ரயில் தண்டவாளத்தில் வீசியுள்ளனர். இவர் மீது இரயில் ஏறினமையால் கால்கள் துண்டிக்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க அகதி அந்தஸ்தை அனுதாப அலை மூலம் பெறுவதற்காக இவரே வேண்டுமென்று இவ்வாறு நடந்திருக்கலாம் என ஜேர்மன் பொலிசார் ஒருவர் வெளியிட்ட கருத்தானது இனவெறியாளர்களின் செயலை மூடிமறைப்பதாக உள்ளதென அவதானிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## மக்களுடைய மனதின்படி ஏற்கனவே
## இலங்கை இரண்டாகப் பிளவுபட்டுவிட்டது

### யாழ் சென்று திரும்பிய சுவீடன் பேராசிரியர்

மக்களுடைய மனதின்படி இலங்கை இரண்டு நாடாகப் பிளவு பட்டு விட்டது. பீட்டர் சுலக்.

"மக்களினுடைய மனதின்படி ஏற்கனவே இலங்கை இரண்டு நாடாகப் பிளவு பட்டு விட்டது." என சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று திரும்பிய சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீட்டர் சுலக் தெரிவித்துள்ளார். அவர் தான் யாழ்ப்பாணத்தில் கண்ட சம்பவங்களை விபரிக்கையில்

1.குண்டு வீச்சு - அதுவும் தாமே தயாரித்த நேபாம் பாணியிலான பீப்பாக்குண்டுகளை வீசுவது - அரச படைகளுக்கு சாதாரண விடயமாகிவிட்டது. நானே பாதுகாப்புக்காக பதுங்கு குழிகளுக்கும், மரங்களுக்குப் பின்னாலும், பாலங்களுக்கு கீழ் பதுங்கியும், உயிர் தப்ப வேண்டியிருந்தது. எவ்வித முன்னறிவுப்பும் இன்றி மக்கள் செறிந்து வாழும் இடங்கள் மீது வீசப்படும் குண்டு வீச்சால் மக்கள் அழிக்கப்படுகிறார்கள். என்னைச் சந்தித்த டாக்டர் ஒருவர் ஒரு நாளைக்கு ஐந்து முதல் பத்துப் பேர் வரை கொல்லப்படுவதாகக் கூறினார்.

2) கிராமங்களும், நகரங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. வல்வெட்டித்துறை அழிக்கப்பட்டதை நானே கண்டு அனுபவித்தேன்.

3) மருந்துக்கட்டுப்பாடு காரணமாக மக்களுக்கு அத்தியாவசியமான மருந்துக்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசினால் விடுதலைப் புலிகளுக்கு மருந்துகள் பயன்படும் எனச்சாட்டுக் கூறப்பட்ட போதிலும் போலியோ தடுப்பு மருந்து கூட தடுக்கப்படுகின்றது. இது எப்படி புலிகளுக்கு உதவுமென எனக்குத் தெரியவில்லை.

4) மண்ணெண்ணெய் - பெற்றோல், சீனி, பால், காகிதம், காசுப்புழக்கம், மின்சாரம் போன்றவற்றை அரசு தடுத்துR நிறுத்தியிருப்பதால் மக்கள் வாழ்வு, இரண்டு போய் உள்ளது. இதனால் மக்கள் பட்டினி நிலையை நெருங்கியுள்ளனர். கல்வியோ வாசிப்பதோ முடியாத காரியமாக உள்ளது.

ஆயினும் மக்கள் விடுதலையில் உறுதியாக உள்ளனர். மக்களுடைய மனதின்படி இலங்கை இரண்டாக ஏற்கனவே பிளவுபட்டு விட்டது எனக்கூறியுள்ளார்.

## தமிழக மீனவர்
## திருப்பியனுப்பப்பட்டனர்

### தமிழகத்தில் விடுத லைப் புலி ஆதரவாளர் மேலும் கைது

தமிழீழ மண்ணில் மண்டைதீவுக்கரையில் ஒதுங்கிய தமிழக மீனவர்கள் 24 பேரும் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகப் பாதுகாப்பாகத் திருப்பியனுப்பி வைக்கப்பட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழ் நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற பெயரில் 29 தமிழர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 8 பேர் இந்தியத் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை தவறான செய்தி அனுப்பினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அகில இந்திய வானொலியின் கொழும்பு நிருபர் கருப்பசாமியை நாட்டைவிட்டு வெளியேறும்படி இலங்கை அரசு உத்தரவிட்டமைக்கு இலங்கைப் பத்திரிகையாளர்கள் கவலையும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.

## தொண்டமானின்
## சமாதான முயற்சி முறியடிப்பு

இலங்கையில் நடைபெறும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு தான் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக இருப்பதாக திரு.தொண்டமான் அறிவித்ததைத் தொடர்ந்து அவருடைய முயற்சியை வரவேற்று விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடம் அவரை யாழ்ப்பாணம் வருமாறு அழைப்பு விடுத்தது.

தொண்டமான் நீண்ட காலமாக எடுத்துவந்த சமரச முயற்சிக்கு அரசாங்கத்தினர் காலம் கழித்து வந்த வேளையில் கொழும்பில் அதிகாரப் போட்டி தொடங்கியது. காமினி, லலித் ஆகியோரைக் கொண்ட அதிருப்தியாளர்கள்குழு பிரேமதாசாவுக்கு எதிரான ஆயுதமாக தமிழர்களுக்கு . எதிரான இனவாதத்தையே முன் வைத்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். இந்நிலையில் அரசதரப்பு மந்திரியாகிய தொண்டமானுடைய சமரச முயற்சிக்கு அரசதரப்பில் இருந்தும் தடைகள் தோன்றியுள்ளது. தொண்டமானின் முயற்சி காமினி போன்றவர்களின் குற்றச்சாட்டிற்கு வலுவூட்டுவதாக உள்ளதாகவே அரசதரப்பில் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மேலும் இராணுவதரப்பிலும் சமரசமுயற்சிக்கு பலத்த எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத் தரப்பினர் ஆனையிறவில் அடைந்த வெற்றியின் காரணமாக தாம் வடபகுதி முழுவதையும் கைப்பற்றிவிடலாம் என்று கருதுவதாகவும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை பெளத்த சங்கங்களும் புலிகளுடன் சமரசம் ஏற்படுவதை எதிர்த்து வருகின்றன. இந்நிலையில் தொண்டமானின் சமரச முயற்சியை அரசு எதிர்க்கத் தொடங்கியுள்ளது. தொண்டமான் தான் புலிகளிடம் சமர்ப்பித்த தீர்வுக்கு புலிகளிடமிருந்து தகுந்த பதில் கிடைக்க வேண்டுமென்று அறிக்கை விடுத்து தன்னுடைய முயற்சி தோல்வியடைந்ததை ஒருவகையில் சமாளித்துள்ளார்.

மேலும் யாழ் மாவட்டப் பகுதிகளின் மீது தீவிர தாக்குதலை நடத்தி சிலபகுதிகளைக் கைப்பற்றிக்கொள்வதன் மூலம் இராணுவரீதியில் தமது நிலையை உயர்ந்த நிலையில் வைத்துக்கொள்ள சிங்கள அரசு முயன்று வருகின்றது. இத்தாக்குதல்களின் மூலம் விடுதலைப்புலிகளைப் பலவீனமடையச் செய்து அதன்மூலம் அவர்களை மாகாணசபைத் தீர்வை ஏற்கச் செய்யமுடியும் என்றும் இராணுவ வட்டாரங்கள் கருதுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பௌத்த சிங்கள
## பேரினவாதச் செயல்கள்

தென் தமிழீழத்தின் சின்னக் கோணேஸ்வரம் என வரலாற்றுப் பாடல் பெற்ற திருத்தலமும் தமிழீழத்தின் பாரம்பரிய விவசாயப் பூமியுமாகிய தம்பலகாமத்தை "லக் விஜேகம" எனப் பெயர் மாற்றம் செய்து சிங்கள மயப்படுத்தக் கனவு காணும் சிங்கள அரசின் ஆதரவாளர்களான பௌத்தகுருமார் உப்புவெளியில் சமாதான தாது கோபுரம் என்ற பெயரில் புத்த விகாரை ஒன்றை கட்டிமுடிக்கும் நிலையை அடைந்துள்ளனர்.

தமிழீழ மக்களும் தமிழீழபிரதேசமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரணகட்டுப்பாட்டில் விரைவில் கொண்டுவரப்படல் வேண்டும் என்னும் விடுதலைவிரும்பிகளின் கூற்றின் அவசியத்திற்கு இச் சம்பவங்கள் சான்றுபகர்கின்றன.

## சுரேந்தி, குஞ்சன்,
## சௌந்தி மரணம்

விடுதலைப்புலிகளின் மேற்கு ஜேர்மன் கிளையின் இணைப்பொருப்பாளராக செயற்பட்டுவந்த சுரேந்தி என அன்பாக அழைக்கப்படும் நமசிவாயம் சுரேந்திரக்குமார், ஜேர்மன் கிளையின் கலாச்சாரப்பிரிவின் பொருப்பாளரான குஞ்சன் என அன்பாக அழைக்கப்படும் குருநாதர் கிருஸ்ணமூர்த்தி டொர்மூண்ட் பிராந்தியப் பொறுப்பாளர் சௌந்தி என அன்புப் பெயர் கொண்ட தர்மலிங்கம் சௌந்தரராஜன் இவரின் மனைவி விஜயகுமாரி, மகள் சபேலா ஆகிய ஐவரும் கார்விபத்தொன்றில் ஜேர்மனியில் மரணம் அடைந்த செய்தியை தாங்கொணா துயரத்துடன் தமிழீழமக்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

தாயகத்தை விட்டு வெளியேறிய பின்பும் ஐரோப்பாவின் தொழில் நுட்பத்திலும் வாழ்க்கைக் கவர்ச்சிகளிலும் மயங்காது, தம் தமிழீழத்தினதும் தமது தமிழீழமக்களினதும் வாழ்வுக்காகவும் வளத்திற்காகவும் உழைத்த இவ் உத்தமர்களின் பிரிவு தமிழீழமக்களுக்கு ஆழ்ந்த கவலையை அளித்துள்ளது.

தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைமையில், தமது விடுதலைப் பயணத்தில் தம்மால் இயன்ற பங்களிப்பை எல்லாம் நல்கிய இத்தியாக உள்ளங்களின் பிரிவுக்கு நாம் நமது ஆழ்ந்த அனுதாபத்தை பாசத்துடன் தெரிவித்துக் கொள்ளும் நேரத்தில் அவர்களது இலட்சியங்களை நிறைவேற்ற அவர்களைப் போல வேகமுடன் உழைத்து தமிழீழத்தை மீட்பது ஒன்றே அவர்களுக்கு நாம் வழங்கும் நிரந்தரமான காணிக்கை.

## யாழ் நகரைக் —

றைக்கு தரையிறக்க முற்பட்ட மூன்று படகுகள் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி மூழ்கியுள்ளன. அராலிப்பகுதிகளில் அமைந்துள்ள புலிகளின் காவலரண்களை அழிக்க விமானப்படையினர் முயன்று வருகின்ற போதிலும் புலிகளின் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளின் தாக்குதலால் தாழப்பறந்து தாக்குதல் நடத்த முடியாமல் உள்ளதாகவும் படையினர் அறிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் மிகவும் பலமாகவும், உறுதியாகவும் எதிர்த்து நிற்பதால் அராலித்துறையில் தமது நிலைகளை பலப்படுத்துவதே இராணுவத்தினருக்குப் பெரும்பாடாக உள்ளது. ஆனால் எந்தவிதத்திலும் இராணுவத்தினர் யாழ் நகரை நோக்கி முன்னேற முடியாதவாறு விடுதலைப்புலிகள் மிகவும் பலமாக எதிர்த்து வருகின்றனர். அனைத்து மக்களையும் இராணுவத்தினரைத் தடுத்து நிறுத்தும் இவ் யுத்தத்திற்கு உதவுமாறு விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர். முன்னேறும் இராணுவத்தினரை தடுத்து நிறுத்தும் பணியில் பல்லாயிரக் கணக்கான விடுதலைப்புலிகள் பங்குபற்றி வருகின்றனர்.

"விடுதலைப்புலிகளின் குரல்"
செய்திச் சேவையை உடனேயே கேட்கக்கூடிய வகையில்
• 50 இணைப்புகளுடனான புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. •
தொ.பே.இல: 0898 777663

# புலிகளின் பாலைவனப்போர் முறையிலான புதியபாணி !

புலிகளின் பாலைவனப் போர் முறையிலான புதிய பாணி

தற்போது யாழ் நகரைக் கைப்பற்றும் நோக்குடன் முன்னேற முயலும் இராணுவத்தினர் வெளியான பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதால் திறந்த வெளிப்பிரதேசத்தில் நின்று சண்டையிடுவதற்கான பாலைவனப் போர்முறையில் அமைந்த புதிய பாணியை விடுதலைப் புலிகள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

பாலைவன யுத்தங்களின் போது திறந்த வெளியில் நின்று சண்டையிடுவதற்காக அமைக்கப்படும் பாதுகாப்பு வலையங்களையும், தாக்குதல் விபரங்களையும் அமைத்து விடுதலைப்புலிகள் இராணுவத்துடன் மோதி வருகின்றனர். இப் புதிய பாணியில் அமைந்த எதிர்த் தாக்குதலால் இராணுவத்தினரின் முன்னேற்றம் தடுக்கப்பட்டிருப்பதாகவும், இராணுவத்தினருக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளதாகவும் புலிகளின் தரப்பில் இருந்து தெரிவிக்கப் படுகின்றது.

ஆனையிறவுப்பகுதியில் வெளியில் நடந்த சண்டைகளின் பின் இப்புதிய முறையிலாயான பாணி வடிவமைக்கப்பட்டு தற்போதைய யுத்தத்தில் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய பாணியில் அமைக்கப்பட்டுள்ள காவலரண்களை விமானத்திலிருந்து அடையாளம் கண்டுகொள்வது கடினமாக இருக்கும் விமானக்குண்டு வீச்சால் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இவை அமைக்கப்பட்டிருப்பதால் புலிகள் தரப்பில் ஆட் சேதம் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இத்தகைய காவலரண்களையும், நிலைகளையும் இராணுவத்தினரிடம் இருக்கும் ரொக்கற் லோஞ்சர் ஏவுகனைகளாலும் தகர்க்க முடியாது என்றும் இப்புதிய பாணியில் அமைந்த வியூகங்களின் மூலம் இராணுவத்தினரை மிகக்கிட்டே நெருங்கித் தாக்கக் கூடியதாக உள்ளதாகவும் தெரியவருகிறது.

புலிகளின் இராணுவ ஆய்வுப்பிரிவினாலேயே இவ் நவீன பாதுகாப்பு முறை வடிவமைக்கப் பட்டதாகவும் இது குறிப்பாக பரந்த வெளிச் சண்டைகளின் போதே கடைப்பிடிக்கச் சிறந்தது என்றும் தெரிவித்துள்ளனர். பகல் வேளையில் கூட எதிரி அறியாதவாறு எதிரியை கிட்டே நெருங்கித்தாக்கக் கூடியதாகவும் இப்பாணி மிகவும் பிரயோசனமானதும் முக்கியமானதும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# இராணுவத்திற்கு தமிழ்க்குழுக்கள் வழிகாட்டல்

ஊர்காவற்துறைப் பகுதியில் இருந்து இராணுவத்தினர் முன்னேறுவதற்கு வழிகாட்டியாக தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களே பயன்படுத்தப்படுகின்றனர். இத்தமிழ்க் குழுக்களின் வழிகாட்டலுடன் அராலித்துறையில் வந்து படகுகளின் மூலம் தரையிறங்க முற்பட்ட இராணுவத்தினரின் மூன்று விசைக் படகுகள் புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப் பட்டது. இப்படகுகளின் வழிகாட்டியாக வந்த தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த ஒருவர் படு காயத்துடன் புலிகளிடம் பிடிபட்டுள்ளார். அவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் படி மண்டைதீவுப்பகுதியில் முன்னேறும் இராணுவத்தினருக்கும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களே வழிகாட்டிச் செல்வதாகவும் மண்டைதீவுப் பகுதிகளில்

கைதுசெய்யப்படும் பொதுமக்களை அடையாளம் காண்பதற்காக தாம் பயன்படுத்தப் படுவதாகவும் தெரிவித்தார்

கொழும்பிலுள்ள தமது தலைமைப் பீடத்திற்கும் தமக்கும் தொடர்பு இல்லை என்றும் தாம் இராணுவத்தினரின் கட்டளைப்படியே செயற்படுவதாகவும் கொழும்பிலுள்ள தமது தலைவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை வந்து தம்மைப் பார்வையிடுவதாகவும் ஆனால் தாம் இராணுவத்தினரின் கீழேயே பணியாற்றுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**வாசகர்களுக்கென கேள்வி - பதில் பகுதி அடுத்த இதழில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.**

## பசித்த நம் தெருவாழ்வை மாற்றுதல் உங்கள் கைகளிலே



தமிழீழ விடுதலைப் புலிகள் (பிரித்தானியக் கிளை)
54 Tavistock Place, London WC1H 9RG
Tel : 071-837 7162 Fax : 071-278 5666.

தொலைபேசிச் செய்திச் சேவை இல.
தமிழ் : 071-837 0808
ஆங்கிலம் : 071- 833 0949

அச்சுப்பதிப்பு: செல்வம் அச்சகம், தொலைபேசி: 081-478-6766